IN THE COURT OF THE SUBORDINATE COURT, VANDAVASI

**CASE NO: OS.490/2024**

DEPOSITION OF WITNESS: **PW1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name/பெயர் | : | ஷீலா | | : | |
| Father's/Husband's Name<br>தந்தை/கணவர் பெயர் | : | ஆறுமுகம் | Calling/<br>தொழில் | : | |
| Village/கிராமம் | : | மொசவாடி | | : | |
| Taluk/தாலுக்கா | : | வந்தவாசி | Age/வயது | : | 48 |

The witness sworn under Oaths Act 1969 on this the day of 13th day of August 2025.

**முதல் விசாரணை**

நான் மொசவாடி கிராமத்தில் வசிக்கிறேன். நான் வழக்கின் வாதி ஆவேன். பிரதிவாதியை தெரியும். முதல் விசாரணைக்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். படித்துபார்த்து கையொப்பம் செய்தேன். கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

**வாதி தரப்பில் தாக்கல் செய்யும் ஆவணங்கள்**

1. 03.02.2003 தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆகும்.

2. 22.04.2004 தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆகும்.

3. 26.08.2016 அன்று வாதியின் சகோதரர் ஜான் பீட்டர் இறந்ததற்கான இறப்பு சான்றிதழ் ஒப்பிடப்பட்ட நகல் **வா.சா.ஆ.3** ஆகும்.

4. 07.03.2017 அன்று வாதியின் தந்தை இறந்ததற்கான இறப்பு சான்றிதழ் ஒப்பிடப்பட்ட நகல் **வா.சா.ஆ.4** ஆகும்.

5. 04.01.2024 தேதியிட்ட வாதியின் சகோதரர் ஜான் பீட்டர் வாரிசுகள் வாதிக்கு ஆக்கு விடுதலை பத்திரம் செய்து கொடுத்த ஆவணம் **வா.சா.ஆ.5** ஆகும்.

6. 13.10.2016 தேதியிட்ட வாதியின் சகோதர் ஜான் பீட்டரின் வாரிசு சான்றிதழ் ஒப்பிடப்பட்ட நகல் **வா.சா.ஆ.6** ஆகும்.

7. 21.07.2017 தேதியிட்ட வாதியின் தந்தை அந்ததோனிசாமி வாரிசு உரிமை சான்றிதழ் ஒப்பபிடப்பட் நகல் **வா.சா.ஆ.7** ஆகும்.

8. தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கிடைக்கப் பெற்ற மின்வாரிய ரசீது வாதியின் சகோதரர் ஜான் பீட்டர் பெயரில் உள்ளது நகல் **வா.சா.ஆ.8** ஆகும்.

9.27.05.2024 தேதியிட்ட வாதியின் பெயரில் பெறப்பட்ட கணினி பட்டா எண்.635 கணினி நகல் **வா.சா.ஆ.9** ஆகும்.

10. வில்லங்க சான்று ஆவணம் நகல் **வா.சா.ஆ.10** ஆகும்.

எனவே, பிராதுபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2025.08.13 18:38:42 +0530

சார்புநீதிபதி
வந்தவாசி

சாட்சியின் கையொப்பம்